**தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

---

2017 ஆம் ஆண்டு 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) சட்டத்தால் திருத்தம் செய்யப்பட்ட 2016 ஆம் ஆண்டு 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தில் முதலாவது அட்டவணையிலும் மூன்றாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்டுள்ள தலைப்பு மற்றும் விடய இலக்கத்திற்கமைவாக ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் கணக்கிணக்கக் கூற்று என்பன வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தக் கணக்குகளிலும் கணக்கிணக்கக் கூற்றுகளிலும் வெளிப்படுத்தும் நிதி மற்றும் செயலாற்றுகை என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரை பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது.

1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரது நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்கீட்டு நெறிமுறை தொடர்பான பொறுப்பு

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவையில் நிதி ஒழுங்குவிதி 124 இன் பிரகாரம் அரசிறை சேர்த்தலும், அரசாங்கத்தின் பிற பணங்களைச் சேர்த்தலும் மற்றும் அரசாங்கத்தின் எல்லா நிதி நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தல் தொடர்பான பொது கண்காணிப்பும் நிதி அமைச்சரின் பொறுப்பாகும். ஆகவே அவரால் அந்த பொறுப்பினை நிறைவேற்றும் பொருட்டு நிதி ஒழுங்குவிதிகள் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்யப்பட்டுள்ளது. நிதி ஒழுங்குவிதி 125(1)(அ) இன் பிரகாரம் திணைக்களத்து தலைவர் தமது திணைக்களத்தின் சகல விதமான நிதிக் கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோத்தராவதுடன், அரசிறைக் கணக்கீட்டு உத்தியோகத்தரை திறைசேரியால் நியமனம் செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்குள் தமது கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றப்பட்டு சமர்ப்பிக்கப்படும் கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்க கூற்றுகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 148இ 149இ 150 மற்றும் 152 உறுப்புரைகளும், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகள் மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகளுக்கமைவாக பேணிச் செல்லுதல், தயாரித்தல், நியாயமான வகையில் சமர்ப்பிப்பதற்கு ஏற்புடையதான உள்ளக கட்டுப்பாடுகளை திட்டமிடல், நடைமுறைப்படுத்தல் மற்றும் அவற்றை பேணதலும் இந்த பொறுப்புகளுள் உள்ளடங்கும்.

1.3 கணக்காய்வு விடயவெல்லை

தலைப்பு 239 – வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிசார் மற்றும் பௌதீக செயலாற்றுகை தொடர்பில் திட்டமிடல், அரச செலவுகள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வளங்களை முகாமைத்துவம் செய்தல், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளை பயன்படுத்தல், சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு ஒழுங்கமைதல், புத்தகங்கள், ஆவணங்கள், அறிக்கைகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகளை இற்றைப்படுத்தி பேணுதல், கணக்குகளை தயாரித்து காலத்திற்கேற்றவாறு சமர்ப்பித்தல், செயலாற்றுகை சுட்டிகளை அடிப்படையாகக்கொண்டு சம்பந்தப்பட்ட தரப்புகளிடம் செயலாற்றுகை அறிக்கைகளை வழங்குதல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசில் அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளின்கீழ் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மீளாய்விற்கான ஆண்டில் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆந் திகதி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திடம் வழங்கப்பட்டது. கணக்கீடுகள் மற்றும் கணக்கிணக்கக் கூற்றுகள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புகள், கணக்காய்விற்கு சமர்ப்பித்த திட்டமிடல், கணக்கீடுகள், கணக்கிணக்கக் கூற்றுகள் மற்றும் செயலாற்றுகை அறிக்கைகள் பற்றிய மீளாய்வுகள் அத்துடன் கொடுக்கல்வாங்கல்களில் மாதிரிகள் தொடர்பான உறுதிப்பாடுகள் பரிசோதனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன. அந்த மீளாய்வு, பரிசோதனைகளின் விடயவெல்லை மற்றும் போதியளவு என்பன எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அலுவலக பதவியணி, ஏனைய வளங்கள், கால அவகாசம் போன்ற எல்லைகளுக்குள் இயன்றவரை விரிவான கணக்காய்வை மேற்கொள்ள முடியுமானவாறு தயாரிக்கப்பட்டதாகும்.

1.4 கணக்காய்வு அவதானிப்பு

2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்காக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வில் வெளிப்படுத்திக்கொண்ட கணக்காய்வு அவதானிப்புகள் மேற்படி 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் விபரமாக காட்டப்பட்டுள்ளது. அந்த அவதானிப்புகளில் போதியளவு மற்றும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகளை, இவ்வறிக்கையில் 2.1 பந்தியிலிருந்து 2.9 வரையிலான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. நிதி நிருவாகத்தில் போதியளவினை உறுதிப்படுத்தும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவையில் 128 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை நிறைவேற்றும்போது வெளிப்படுத்திக்கொண்ட, பின்வரும் குறிப்பில் சாரம்சப்படுத்தி காட்டப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புகளுக்கமைவாக கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்கீட்டு நெறிமுறைகளை திருப்திகரமாக நிறைவேற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டது.

| நிதி ஒழுங்குவிதிகள் | நிதி ஒழுங்குவிதி 128 (1) பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்கீட்டு நெறிமுறை | கணக்கீட்டு உத்தியோகத்தர் அந்த ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகாமை | அவதானிப்பு உள்ளடக்கிய அறிக்கையில் பந்தி தொடர் |
|---|---|---|---|
| 128(1)(அ) | அனுமதித்த முயற்சிகளுக்கு நிதி ஏற்பாடு அளிக்கையில் பாராளுமன்றத்துக்கு இருந்த எண்ணங்களுக்கும் அரசாங்க கொள்கைக்கும் மதிப்புக் கொடுத்து அவரின் திணைக்கள வேலைகள் திட்டமிடப்பட்டு உரிய காலத்தில் நிறைவேற்றப்படுகின்றன எனவும், அவ்வாண்டுக்கென விதிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கும் அல்லது குறிப்பிட்டுள்ள இலக்கை எய்துவதற்கும் அல்லது இவ்விரண்டிற்கும் முயற்சி செய்யப்படுகின்றதெனவும் | 1. நிலைபேறுடனான அபிவிருத்தி நோக்கங்களின் பொருட்டு திட்டமிடலில் உள்ள குறைப்பாடுகள் | 2.1 |
| | | 2. வரவு செலவு மதிப்பீடுகளை இயல்பாக தயாரிக்கப்படாமை | 2.4 |
| | | 3. கட்டுநிதி மதிப்பீடுகளை தயாரிப்பதில் உள்ள குறைபாடுகள் | 2.6 |
| | | 4. ஆவணங்களும் புத்தகங்களும் பேணப்படாமை | 2.7 |
| 128(1)(இ) | அரசாங்கத்தின் நிதி ஒழுங்குவிதிகளையும் பிற குறைநிரப்பு அறிவுறுத்துரைகளையும் தனது திணைக்களம் கடைபிடிக்கின்றதெனவும், தேவையான விடயத்தில் அவை திணைக்கள அறிவுறுத்துரைகளால் குறைநிரப்பப்படுகின்றனவெனவும் | இணங்கியொழுகாமை | 2.9 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளனவெனவும், அத்தகைய வேலைக்கென ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் நிலுவைகள் சம்பந்தமாகவும் அவைகளை விரைவில் அறவிடுவதற்கு எடுத்த நடவடிக்கைகள் சம்பந்தமாகவும் காலாண்டுக்கொருமுறையாவது அல்லது வேறு வழியில் பணிக்கப்பட்டவாறு தனக்கு அறிவிக்கின்றார்கள் எனவும், | அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கில் நிலுவை கடன் மீதி அறவிடுதல் | 2.5 |
| 128(1)(ஐ) | அரசாங்க அலுவல்களின் கொடுக்கல்வாங்கலில் எதிர்பார்க்கப்படும் சிக்கனம், திறமை, ஒழுக்கமுடமை, நேர்மை ஆகியவற்றிற்கு உரிய மதிப்புக் கொடுத்துத் தனது திணைக்கள முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றனவெனவும், | முகாமைத்துவ குறைப்பாடுகள் | 2.3 |

2. போதியளவிலானதும் முக்கியமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்

2.1 திட்டமிடல்

2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக அறிவுறுத்தப்பட்டமைக்கு அமைவாக திணைக்களத்தால் தமது விடயவெல்லைபடி அடைந்துக்கொள்ள வேண்டிய நோக்கங்களாக, நிலைபேறுடன்கூடிய அபிவிருத்திக்கு உலகளாவிய ஒத்துழைப்பை நடைமுறைப்படுத்தும் வாய்ப்புகளை வலுவூட்டல் மற்றும் மறுமலர்ச்சி ஆகிய நோக்கங்களை அடையாளம் காணப்பட்டிருப்பினும், அது தொடர்பான இலக்குகள், அடிப்படையாகக்கொண்ட தரவுகள், அடைந்துக்கொள்ள வேண்டிய திருப்புமுனைகள் மற்றும் முன்னேற்றம் அளவிடுவதற்கான சுட்டிகளை அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை.

2.2 சொத்துக்களின் முகாமைத்துவம்

சொத்துக்களை ஆவணப்படுத்தல்

2017 ஆம் ஆண்டில் வருடாந்த பொருட் மீளாய்வு அறிக்கைபடி திணைக்களத்திடம் கிடைக்கப்பெற்றிருந்த 13 பொருட் வகைகள் பொருட் விவர பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) வாகனங்களின் உபயோகம்

திணைக்களத்திற்குரியதாக மீளாய்விற்கான ஆண்டு இறுதியில் 11 வாகனங்கள் இருந்தன. அதில் 118,058 கி.மீ. தூரம் ஓட்டத்தில் விடப்பட்டிருந்ததுடன், எரிபொருள் மற்றும் மசகு எண்ணெய் பொருட்டு ரூபா.3,624,491 ம், வாகனங்களின் சர்விஸ் பொருட்டு ரூபா.475,915 ம், வாகனங்களை பழுதுபார்த்தல் பொருட்டு ரூபா.3,885,323 ம், வாகனங்களின் காப்புறுதி பொருட்டு ரூபா.671,372 ம், என்ற வகையில் மொத்தம் ரூபா.8,657,102 தொகை செலவிடப்பட்டிருந்தது. அதன்படி திணைக்களத்தால் வழங்கிய தகவல்களுக்கமைவாக கணக்கிடும்போது திணைக்களத்தின் வாகனங்களை ஓட்டத்தில்விடுவதற்காக சாரதி சம்பளம் மற்றும் படிகள் தவிர்ந்த ஒரு கிலோ மீற்றர் தூரத்திற்கு 73 ரூபா செலவிடப்பட்டிருந்தது.

2.3 முகாமைத்துவ குறைப்பாடுகள்

2.3.1 வெளிநாட்டு கருத்திட்டங்களில் நிதியிடல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வெளிநாட்டு கடன்/ அளிப்புகள்மூலம் நிதியிடல் மேற்கொள்ளப்படுகின்ற கருத்திட்டங்களில் செயற்பாட்டினை ஆராய்தல் என்ற பணியினை எய்துக்கொள்வதில் பின்வரும் குறைப்பாடுகள் காணப்பட்டன.

(i) காக்காய் வலிப்பு மருத்துவமனை மற்றும் சுகாதார நிலையங்கள் கருத்திட்டம் தொடர்பாக 75 மில்லியன் சவுதி ரியால் பொருட்டு 2008 ஆம் ஆண்டில் மார்ச் மாதம் 26 ஆந் திகதி முதலாவது கடன் உடன்படிக்கையும், 2015 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆந் திகதி மேலதிக கடன் தொகையான 45 மில்லியன் சவுதி ரியால் பொருட்டு இரண்டாவது கடன் உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டாகும்போது உடன்படிக்கை மேற்கொண்டு 10 ஆண்டுகள் முடிவுற்ற போதிலும் கருத்திட்டம் முற்றுமுழுதாக முடிவுறுத்தப்படாதிருந்ததுடன், இந்த கருத்திட்டம் பொருட்டு 2017 ஆம் ஆண்டில் வரவு

செலவு ஒதுக்கீடுகள் போதுமற்றதன் காரணமாக 600 மில்லியன் ரூபாவிலான மேலதிக ஒதுக்கீடுகளின் தேவை ஏற்பட்டிருந்தது. 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த முறையாக ரூபா.45,978,900 மற்றும் ரூபா.159,688,330 என்ற வகையில் மொத்தம் ரூபா.205,667,230 பெறுமதியில் செலவுகளை மீளளிப்புச் செய்யும் விண்ணப்பங்கள் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதி வரை மீளளிப்புச் செய்யப்படாதிருந்தது. ஆயினும் கடன் இலக்கம் 7/47 இன்கீழ் 13.12 சவுதி ரியால் மில்லியன் அதாவது மொத்த கடன் தொகையில் நூற்றுக்கு 20 இற்கு அண்மித்த தொகை மீள செலுத்தப்பட்டிருந்தது.

(ii) காலி துறைமுக அபிவிருத்தி பொருட்டு 2006 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 28 ஆந் திகதி இலங்கை அரசு, சர்வதேச ஒத்துழைப்பின் பொருட்டு ஜப்பான் வங்கியுடன் (துடீஐஊ) 14,495 ஜப்பான் யென் மில்லியன் பொருட்டு கடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டிருந்தது. அபிவிருத்தி கருத்திட்டங்களுக்கிடையில் முதன்மையுடன் கூடிய கருத்திட்டமாக அடையாளம் காணப்பட்டுள்ள இக் கருத்திட்டம் 2016 ஆம் ஆண்டு மே மாதம் முடிவுறுத்தப்படவிருந்தது. ஆயினும் கருத்திட்டத்திற்கு யுனெஸ்கோ உலக மரபுரிமை நிலையத்தின் அனுமதி பெற்றுக்கொள்வதற்கு 2017 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆந் திகதி வரை ஓராண்டு காலத்திற்கு காலம் நீடிக்கப்பட்டிருந்தது.

யுனெஸ்கோ அனுமதி வழங்கியதன் பின்னர் அப்போது மீதியாக இருந்த கடன் தொகையின் அளவு கருத்திட்டத்தை வெற்றிகரமாக பூர்த்தி செய்வதற்கு போதுமற்றதென குறிப்பிடப்பட்டு 458 ஜப்பான் யென் மில்லியன் விடுவிக்கப்பட்டிருந்த இக் கருத்திட்டம் 2017 ஆம் ஆண்டு யூலை 11 ஆந் திகதி அரசாங்கத்தால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. ஆயினும், இந்த கடன் உடன்படிக்கை தொடர்பாக 2016 ஆம் ஆண்டு தொடக்கம் திசெம்பர் 31 ஆந் திகதி வரை 10,782,000 ஜப்பான் யென் கடன் வட்டியாகவும், 351,000 ஜப்பான் யென் ஏனைய கட்டணங்களாகவும் செலுத்தப்பட்டிருந்தது.

(iii) 2008027 கருத்திட்ட இலக்கத்தின் கீழான உடன்படிக்கை பிரகாரம் 450 ஐக்கிய அமெரிக்க டொலர் விஞ்ஞாத வகையில் கடன் தொகையினை ஈரான் நாட்டு ஏற்றுமதி அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை நாட்டுக்கு கிடைக்கப்பெற வேண்டுமாயினும், 2017 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்றிருந்த தொகை 50,619,304 ஐக்கிய அமெரிக்க டொலர் மட்டுமே ஆகும். 2017 ஆம் ஆண்டில் வாடகை செலுத்தல், வட்டி செலுத்தல் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளாக ஒழுங்குமுறையில் 10,123,861 ஐக்கிய அமெரிக்க டொலரும், 692,613 ஐக்கிய அமெரிக்க டொலரும், மற்றும் 1,733,485 ஐக்கிய அமெரிக்க டொலரும் என்ற வகையில் மொத்தமாக 12,549,959 ஐக்கிய அமெரிக்க டொலர் செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) வெளிநாட்டு உதவி கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் உள்ள தாமதங்கள்

---

(i) புவிப்பரவு ரூபவாகினி ஒளிபரப்பு நடிவடிக்கைகளை டிஜிரல்மயப்படுத்தும் கருத்திட்டம் தொடர்பான கடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 03 ஆண்டுகளுக்கு அண்மித்த காலம் சென்றிருப்பினும், மேலும் அந்தக் கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் கட்டத்திற்கு வந்திருக்கவில்லை. அந்தக் கருத்திட்டத்திற்கு ஏற்புடையதாக 27,434,000 ஜப்பான் யென் தொகையினை வெளிநாட்டு முகவர் நிறுவனத்திடம் செலுத்தப்பட்டிருந்ததுடன், அது அபிவிருத்தி பலன்கள் அல்லாது வெளிநாடொன்றுக்கு பணம் செலுத்தல் மட்டுமென அவதானிக்கப்பட்டது.

(ii) கிழக்காசிய பல்கலைக்கழகத்தை அபிவிருத்தி செய்யும் கட்டம் 1 – ''அ'' கருத்திட்டத்திற்காக அராபி பொருளாதார அபிவிருத்தி பொருட்டான குவேட் நிதியத்துடன், 2011 ஆம் ஆண்டு திசெம்பர் 20 ஆந் திகதி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டது. உடன்படிக்கை பிரகாரம் 2013 ஆம் ஆண்டு இறதியில் கருத்திட்டத்திட்டத்தின்

நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படவிருந்தது. ஆயினும் திட்டங்கள் பிரகாரம் கருத்திட்டத்தை முடிவுறுத்துவதற்கு இயலாமை போனதன் காரணமாக இந்த கருத்திட்டம் முடிவுறுத்தப்பட வேண்டிய காலம் 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதி வரை 03 சந்தர்ப்பங்களில் நீடிக்கப்பட்டிருந்தது. ஆயினும் கடன் செலுத்தும் சலுகை காலம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதமாகும்போது முடிவுறுத்தப்பட்டிருந்தது.

(iii) ஆசிய அபிவிருத்தி வங்கியின்கீழ் நடைமுறைப்படும் 03 கருத்திட்டங்களில், உலக வங்கியின் கீழான கருத்திட்டம் மற்றும் ஜப்பான் அரசாங்கத்தால் நிதி வழங்கும் கருத்திட்டம் என்பவற்றின் மொத்தம் 727.3 ஐக்கிய அமெரிக்க டொலர் மில்லியனாகும். கருத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு கவனிக்கத்தக்க காலம் முடிந்திருந்த, இந்தக் கருத்திட்டங்களில் காலவெல்லை முடிவுறுவதற்கு அண்மித்திருந்தது. ஆயினும், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் 31 அந் திகதியில் அந்தக் கருத்திட்டம் பொருட்டு நிதி உபயோகம் நூற்றுக்கு 5 தொடக்கம் நூற்றுக்கு 61 வரை குறைந்த மட்டத்தில் இருந்தது.

(இ) அவுஸ்த்ரேலியாவில் 20,000 ம் பசுமாடுகளை ஐக்கிய அமெரிக்க டொலர் 73,954,054 பெறுதியில் கொண்டு வருவதற்கு 2016041 இலக்க கருத்திட்டத்தின்கீழ் ஐக்கிய அமெரிக்க டொலர் 6,559,020 ஆண்டுக்குள் கிடைக்கப்பெற்றிருந்தது. இதற்காக வட்டி மற்றும் ஏனைய கொடுப்பனவுகளின் பொருட்டு ஒழுங்கு முறையாக ஐக்கிய அமெரிக்க டொலர 77,434 ம் மற்றும் 65,410 ம் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டில் முதலாவது கட்டமாக 5,000 ம் பசுக்களை கொண்டு வருவதற்காக ரூபா.2,638,324,149 செலவிடப்பட்டிருந்த போதிலும், கொண்டு வரப்பட்ட பசு மாடுகளிடமிருந்து எதிர் பார்க்கப்பட்ட பலனை அடைந்திருக்கவில்லை. அவ்வாறு இருக்கையில் 2018 ஆம் ஆண்டு மே மாதம் 08 ஆந் திகதி இரண்டாவது கட்டமாக கருத்திட்டத்தின் பொருட்டு வரவு செலவு ஒதுக்கீடுகளின்றி ஐக்கிய அமெரிக்க டொலர் 11,093,108 ஆன தொகை (ரூபா.1,719,431,776 அளவு) முற்பணத் தொகையாக அவுஸ்த்ரேலியா வழங்குநர்களிடம் செலுத்தப்பட்டிருந்தது.

2.3.2 2017 திசெம்பர் 06 ஆந் திகதிக்கு முன்னர் இலங்கையில் கையொப்பமிட இருந்த மகாமோதர மகப்பேற்று இல்லம் தொடர்பான கருத்திட்டத்திற்கு மேலதிக ஒதுக்கீடுகளை ஏற்பாடு செய்து கொள்வதற்கான உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்காக ஜேர்மனிக்கும், 2018 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதமாகும்போது கையொப்பமிடப்படாத 04 கருத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு ஹங்கேரியாவுக்கும், செல்வதற்காக மூன்று அலுவலர்களுக்கு விமானக் கட்டணங்களாக ரூபா.1,057,500 ம், இணைந்த படி மற்றும் அமய படிகளாக மூன்று அலுவலர்களின் பொருட்டு ரூபா.1,230,823 என்ற வகையில் மொத்தம் ரூபா.2,288,323 ம், 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதத்தில் கொடுப்பனவுகளை செலுத்தப்பட்டிருந்தது.

2.4 கடமைப் பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் அளிக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை உபயோகப்படுத்தல்

2017 ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டு காலப்பகுதிக்குள் திணைக்களத்திற்கு ஏற்பாடு செய்திருந்த ஒதுக்கீடுகள், உபயோகம் மற்றும் மீதி தொடர்பான தகவல்களும் அது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகளும் பின்வருமாறாகும்.

| ஆண்டு | செலவு வகை | தேறிய ஒதுக்கிட | உபயோகம் | மீதி | மீதி தேறிய ஒதுக்கீட்டில் சதவீதமாக |
|---|---|---|---|---|---|
| | | ரூபா.மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டுவருஞ் | 316.15 | 182.99 | 133.16 | 42.00 |
| | மூலதனம் | 1420.27 | 1388.25 | 32.02 | 2.25 |
| | மொத்தம் | 1736.42 | 1572.25 | 165.17 | 9.51 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2014 | மீண்டுவருஞ் | 264.90 | 184.88 | 80.02 | 30.20 |
| | மூலதனம் | 1272.25 | 890.31 | 381.94 | 30.02 |
| | மொத்தம் | 1537.15 | 1075.19 | 461.96 | 30.00 |
| 2015 | மீண்டுவருஞ் | 333.24 | 196.97 | 136.27 | 41.00 |
| | மூலதனம் | 2674.61 | 677.86 | 1996.76 | 75.00 |
| | மொத்தம் | 3007.85 | 874.82 | 2133.03 | 71.00 |
| 2016 | மீண்டுவருஞ் | 351.39 | 218.52 | 132.86 | 38.00 |
| | மூலதனம் | 2434.46 | 2344.14 | 90.32 | 4.00 |
| | மொத்தம் | 2785.84 | 2562.66 | 223.18 | 8.00 |
| 2017 | மீண்டுவருஞ் | 598.53 | 585.16 | 13.37 | 2.00 |
| | மூலதனம் | 2687.35 | 2684.57 | 2.78 | 0.11 |
| | மொத்தம் | 3285.88 | 3269.73 | 16.15 | 0.50 |

மீளாய்விற்கான ஆண்டில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்விற்கான அண்டில் வெளிநாட்டு பிரயாணச் செலவுகளின் பொருட்டு குறைநிரப்பு மதிப்பீடுகள்மூலம் ஆரம்ப மதிப்பீட்டு ஒதுக்கீடுகளுடன் ஒப்பிடுகையில் நூற்றுக்கு 219 ஆன ஒதுக்கீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) 03 மூலதன செலவு விடயங்களின் மொத்தம் ரூபா .3,189,000 ஆவதுடன், தேறிய ஒதுக்கீடுகளின் மொத்தம் ரூபா.1,758,921 ஆன மீதி நிலவியதுடன், அது நூற்றுக்கு 50 தொடக்கம் 91 வரையிலான எல்லைக்குள் இருந்தது.

## 2.5 அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்குகள்

### பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்

திணைக்களத்திற்கு ஏற்புடையதான செலவு விடய இலக்கம் 23901 இன்கீழ் அரசாங்க அலுவலர்களின் முற்பணக் கணக்கின் பொருட்டு பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உண்மையான பெறுமதிகள் பின்வருமாறாகும்.

| செலவினம் | | கிடைக்கப்பெறுதல் | | பற்று மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உண்மையான | ஆகக் குறைந்த எல்லை | உண்மையான | ஆகக் கூடிய எல்லை | உண்மையான |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 7.00 | 6.99 | 3.50 | 4.44 | 30.00 | 22.13 |

கணக்காய்விற்கு சமர்ப்பித்த கணக்கிணக்க கூற்று பிரகாரம் 2017 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் அறவிட வேண்டியிருந்த மீதி ரூபா.75,166 ஆவதுடன். அது ஓராண்டு மற்றும் 08 மாதங்கள் வரையிலான காலம் தொடர்ந்து இருந்தது.

2.6 கட்டுநிதி கணக்குகள்

மீளாய்விற்கான ஆண்டில் திணைக்களத்தால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதி மதிப்பீடுகளின் பொருட்டு மாதாந்தம் பெற்றுக்கொள்வதற்கு எதிர் பார்க்கப்பட்ட கட்டுநிதிகள், மாதாந்தம் கோரப்பட்ட கட்டுநிதிகள் மற்றும் கிடைக்கப்பெற்றிருந்த கட்டுநிதிகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும்.

| மாதம் | திட்டமிடப்பட்ட வாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதி | கோரப்பட்ட கட்டுநிதி ரூபா. மில்லியன் | கிடைக்கப் பெற்றிருந்த கட்டுநிதி ரூபா. மில்லியன் | திட்டமிடப்பட்ட வாறு கோரப்பட்ட கட்டுநிதிகளுக்கிடையில் உள்ள வேறுபாடு ரூபா.மில்லியன் | கோரப்பட்ட கட்டநிதி மற்றும் கிடைக்கப் பெற்றிருந்த கட்டுநிதிகளுக் கிடையிலான வேறுபாடு ரூபா.மில்லியன் |
|---|---|---|---|---|---|
| சனவரி | 8.15 | 1625.06 | 1623.43 | (1616.91) | (1.63) |
| பெப்ருவரி | 8.10 | 9.66 | 8.76 | (1.56) | (0.90) |
| மார்ச் | 93.82 | 16.16 | 13.40 | 77.66 | (2.76) |
| ஏப்பிரல் | 8.70 | 19.29 | 14.18 | (10.60) | (5.12) |
| மே | 8.45 | 15.76 | 9.90 | (7.31) | (5.86) |
| யூன் | 93.72 | 181.53 | 176.24 | (87.81) | (5.29) |
| யூலை | 8.70 | 16.94 | 12.80 | (8.24) | (4.14) |
| ஆகஸ்ட் | 8.70 | 190.15 | 109.45 | (181.45) | (80.70) |
| செப்தெம்பர் | 93.97 | 203.79 | 203.40 | (109.81) | (0.39) |
| ஒக்டோபர் | 8.45 | 9.59 | 7.89 | (1.14) | (1.70) |
| நவம்பர் | 96.02 | 13.85 | 9.19 | 82.17 | (4.66) |
| திசெம்பர் | 1624.25 | 37.80 | 23.50 | 1586.45 | (14.30) |
| மொத்தம் | 2061.03 | 2339.58 | 2212.14 | 278.55 | (127.45) |

மீளாய்விற்கான அண்டில் திட்டமிடப்பட்டவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதி 2061.03 மில்லியன் ரூபாவாக இருப்பினும், 2339.58 மில்லியன் ரூபா கோரப்பட்டுள்ளதால் , 278.55 மில்லியன் ரூபா மேலதிகமாக கோரப்பட்டிருந்தது. அதேபோன்று திட்டமிடப்பட்டுள்ளவாறு கோரப்பட வேண்டிய கட்டுநிதியை விஞ்சி 151.11 மில்லியன் ரூபா பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது.

2.7 ஆவணப் பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

1978 ஆம் ஆண்டு திசெம்பர் 19 அந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை/ நிதி ஒழுங்குவிதி 502(2) பிரகாரம் அதில் 11 ஆவது பின்னிணைப்புபடி நிலையான சொத்துக்களின் பதிவேடு இற்றைப்படுத்தி பேணப்படவில்லை.

2.8 இணங்கியொழுகாமை

சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் என்பவற்றுக்கு இணங்கியொழுகாத சந்தர்ப்பம் பின்வருமாறாகும்.

| சட்டங்கள், விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் தொடர் | பெறுமதி | இணங்கியொழுகாமை |
|---|---|---|
| | ரூபா | |
| 2015 மே 15 ஆந் திகதி நிதி அமைச்சு சுற்றறிக்கை இலக்கம் 01/2015/01 இல் 4(ஆ) பந்தி | 2,603,967 | அவுஸ்த்ரேலியாவில் நடைபெற்ற கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் வெளியீடுகளின் ஆற்றல்கள் (Project Management & Notification Skills ) பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தின் பொருட்டு வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் பங்குபற்றிய 13 அலுவலர்களுக்கு செலுத்தல்களை மேற்கொள்ளுதல். |

2.9 மனித வளங்களின் முகாமைத்துவம்

2.9.1 இணைக்கப்பட்ட பதவியணி, உண்மையான பதவியணி மற்றும் ஆளுக்குரிய வேதனாதிகள்

திணைக்களத்தின் கடமைப்பொறுப்புகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் அங்கீகரிக்கப்பட்ட, உண்யைமனா மற்றும் வெற்றிட பதவியணி தொடர்பான விபரங்கள் பின்வருமாறாகும். மீளாய்விற்கான ஆண்டின் பொருட்டு திணைக்களத்தால் ஆளுக்குரிய வேதனாதிகளின் செலவு தொகுதி பொருட்டு 78.14 மில்லியன் ரூபா செலவிடப்பட்டிருந்தது. அதன்படி தனிநபர் செலவு வருடாந்தம் ரூபா 630,133 ஆக இருந்தது.

| | பதவியணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி | உண்மை யான பதவியணி | வெற்றிடங் களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேட்ட மட்டம் | 57 | 46 | 11 |
| (ii) | மூன்றாம்நிலை மட்டம் | 04 | 03 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை மட்டம் | 63 | 51 | 12 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 31 | 24 | 07 |
| | மொத்தம் | 155 | 124 | 31 |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) உண்மையான பதவியணியில் பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையில் 20 பேர் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தில் 05 ஆண்டு காலம் தொடக்கம் 17 ஆண்டு காலம் வரை பணியாற்றுபவர்களாக காணப்பட்டனர். இந்த நிலைமையானது, புதிய அறிவு, கருத்துகள் மற்றும் அனுபவம் திணைக்களத்திற்கு பெற்றுக்கொள்வதற்கான சந்தர்ப்பங்களையும் வெளியக அலுவலர்கள் இத் திணைக்களத்திற்கு வருவதற்குள்ள வாய்ப்புகளையும் இல்லாது செய்திருந்தது.

(ii) அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 155 ஆயினும், உண்மையான பதவியணி 124 ஆகியதால் வெற்றிடங்களின் எண்ணிக்கை 31 ஆகியதுடன், அது சிரேட்ட மட்டத்தில் 11 வெற்றிடங்களையும், இரண்டாம் நிலை மட்டத்தில் 12 வெற்றிடங்களையும் கொண்டிருந்தது.